RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s109

OPEN ACCESS

# தூப்புகாரி புதினத்தில் வாழுவியல்

**மு. ஜெயலெட்சுமி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, மங்கையர்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை-625402, தமிழ்நாடு, இந்தியா

# The Way of Life in the Novel "Thuppukari"

**M. Jeyalakshmi [a, *]**

[a] Department of Tamil, Mangayarkarasi College of Arts & Science for Women Paravai, Madurai-625402, Tamil Nadu, India

* Corresponding Author: jeyaelango20678@gmail.com

Received: 17-09-2021
Revised: 09-06-2022
Accepted: 14-06-2022
Published: 10-08-2022

Check for updates

## ABSTRACT

Various creators and thinkers keep appearing from time to time. In their works, they leave traces of the information they discover in the environment in which they lived. Writers, creators, and literary men create various works and disappear. But their work lives on with us. We are also reading the literature created in the last century. We are also reading contemporary pieces. I have taken to sharing with you the novel written by a writer who is living with us today. The novel that I have taken up is Thuppukari, a novel by Malarvathi from Kanyakumari district. We have seen so much scientific development and scientific progress in modern times. We have created a robot with such artificial intelligence that it can even think what we are thinking. Even though we have developed so much scientifically, we are lagging behind in some basic things. I have chosen this novel because it portrays the lives of people who are doing low-class occupations or low-class people who are backward in such basic comfort. And we should not end this with the act of reading and enjoying this novel. This novel should lead to a path of awareness Thuppukari's novel is explored keeping in mind that it should break the misconception about some activities which are considered inferior.

**Keywords:** Thuppukari, Malarvathi, Disappear, Misconception

## முன்னுரை

நாம் இன்றும் கூட செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சியிலும் பின்வரும் தகவலைக் கேள்விப்படுகின்றோம் சாக்கடையைத் தூர்வாரும் பணியில் ஈடுபட்டவர்கள் விசவாயு தாக்கி இறந்து விட்டார்கள் என்ற தகவலை அடிக்கடிக் கேட்க முடிகிறது. இது நமக்கு ஒரு செய்தியாக மட்டுமே நாம் உணருகிறோம் ஆனால் உறவுகளை இழந்தவர்களுக்கு அது வாழ்வாதாரத்தை இழக்க வைக்கக்கூடிய ஒரு செய்தியாகும். அத்தொழிலைச் செய்யக்கூடிய குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக வாழவே இவ்வுலகில் பிறந்தவர்கள் மற்ற எல்லா விசயங்களிலும் முன்னேற்றம் அடைந்து விட்டு இந்த அடிப்படையான தொழில் வகையில் முன்னேற்றம் அடையாமல் பின்தங்கி இருப்பது நியாயமல்ல எனவே இத்துறையில் அறிவியல் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்பதை எதிர்கால நோக்கமாக மனதில் கொண்டு நான் இத்தலைப்பை தேர்ந்தெடுத்து உள்ளேன.

## கதைக் கரு

இக்கதையின் கரு என்னவென்று பார்த்தால் இது ஒரு காதல் கதை என்று ஓரிரு வரிகளில் சொல்லிவிட முடியும். இது மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது கிடைக்கும் கருத்தாகும். இந்த நாவலை எழுதிய கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மலர்வதி என்பவர் இந்த கதையில் காதல் ரசம் சொட்டச் சொட்ட எழுதாமல் அம்மக்கள் வாழ்ந்த சூழ்நிலையை அழுத்தமாகப் பதிவு செய்கிறார். நாம் இக்கதையைப் படிக்கும் பொழுது காதல் இன்பம் கிடைக்கவில்லை. மாறாகக் கதை மாந்தர்கள் வாழ்ந்த சூழலில் காணப்படும் கடினமான வாழ்க்கைச் சூழலில் நம் மனதை வதைக்கிறது. அதனால் தான் இந்த நாவலுக்கு சாகித்ய அகடமி விருது (2012), உடைய யுவ பிரஸ்கார் விருதும் கிடைத்தது.

இக்கதையின் கதாநாயகி கனகம். கனகத்தின் மகள் பூவரசி. கனகா மகி மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளராக பணியில் சேர்கிறாள். அவர் அந்த ஊரில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருக்கும் சமுதாயத்தைச் சார்ந்தவர் அல்ல. அவள் வேறு ஒரு சமுதாயத்தை சார்ந்தவர். வறுமையின் காரணமாக அந்த மருத்துவமனை டாக்டரிடம் கடன் வாங்கியுள்ளார். அந்த கடனை அடைப்பதற்காக அந்த மருத்துவமனையில் துப்புரவுப் பணியாளர் பணியில் சேர்ந்துள்ளாள். அவளை அனைவரும் தூப்புக்காரி என்று அழைக்கின்றனர்.

அந்த கனகாவின் ஒரே மகள்தான் பூவரசி. அவளுக்கு 24 வயதாகிறது. ஏழாம் வகுப்பு மட்டுமே முடித்திருக்கும் அவள் தையல் வகுப்பு படித்திருக்கிறாள் வறுமையின் காரணமாக ஏழ்மை நிலையில் இருக்கும் குடும்பத்தினர் பழைய தையல் மெசின் ஒன்று வாங்கி மகளுக்கு கொடுத்திருக்கிறாள். அதில் சிறுசிறு வேலைகளைப் பார்த்துக்கொண்டு பூவரசி இருக்கிறாள். இந்நிலையில் பூவரசிக்குக் காதல் வருகிறது. அந்த மருத்துவமனையில் வாகனம் ஓட்டும் மனோ என்பவருடன் காதல் வருகிறது. அந்த காதல் ரொம்ப வருடங்களாக இருவருமே பகிர்ந்து கொள்ளாமல் மனதுக்குள்ளேயே வைத்துக் கொள்கிறார்கள். மனோ சிறந்த ஓவியராக இருக்கின்றான் ஒரு நாள் பூவரசி ஓவியத்தை அப்படியே தத்ரூபமாக ஒரு தாளில் வரைந்து பின்பு அதைத் தூக்கி எறிந்து விடுகின்றான். அதை எடுத்துப் பார்த்தப் பூவரசி தன்னை போலவே இவனும் தன்னை நேசிக்கிறான் என்று தன் காதலை உணர்கிறாள். இவ்வாறாக இருவருடைய மனதிற்குள்ளும் காதல் தேக்கிவைத்த காதலாகவே இருக்கிறது (Malarvathi. 2012).

இந்நிலையில் அதே மருத்துவமனையில் பணிபுரியும் 42 வயதுடைய வேலப்பன் கனகத்திடம் குப்பை வண்டிக்காரன் மாரிக்கு பெண் கேட்கின்றான. அவள் பதில் சொல்லாமல் சென்று விடுகிறாள். மற்றொரு நாள் அவள் அந்த குப்பை லாரிக்காரன் மாரியைப் பார்க்கிறாள் அவன் நிறைய குப்பையை அள்ளிக் கொண்டு இருக்கிறான் இவ்வளவு குப்பை அல்ல கூடிய இவனுக்கா தன் பிள்ளையை கொடுப்பது இல்லை. தான் கஷ்டப்படுவது போல தன் மகள் கஷ்டப்படக் கூடாது எனவும் உயர்ந்த வேலை பார்க்க்க கூடிய ஒருவனுக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறாள். தன் மகன் தன்னை பார்க்க வரும் பொழுதும் மற்றும் தேயிலை கொடுக்க வரும் பொழுதும் அவளை இங்க வர வேண்டாம் நீ போ, போ எனக் கூறுகின்றாள். அவள் தன்னைப் பார்ப்பதற்காக கூட மருத்துவமனை பக்கம் வரக்கூடாது. அவளுடைய கண்களில் தான் துன்பப்படுவதோ இங்கு இருக்கக்கூடிய அருவருப்பான விசயங்களும் தென்பட கூடாது என்று மறைத்து வைக்கவே எண்ணுகிறாள். இப்படிப்பட்ட நிலையில் அந்த குப்பைக்காரன் மாரிக்கு பெண் கொடுக்க அவள் மனம் ஒத்துக் கொள்ளவே இல்லை

பூவரசிக்கு அவ அம்மா செய்த வேலை பிடிக்கவே இல்லை. அருவருப்பாக உணருவாள். சில சமயம் அவள் அம்மா பார்க்கிற வேலையைப் பார்த்து வாந்தி எடுத்து இருக்கிறாள். அழுதுகிட்டே போவாள் தன்னை வளர்ப்பதற்காக அம்மா இவ்வளவு கடப் படுகிறாளேன்னு பலமுறை வருத்தப்படுவாள். இந்த மனநிலையில் மனோவை காதலிப்பதும் திருமணம் செய்வதும் தம் தரத்திற்கு ஏற்றதல்ல என தன் மனதிற்கு அடிக்கடி கூறிக்கொள்வாள் (Malarvathi. 2012).

இந்த சூழ்நிலையில் மனோ அண்ணனுக்கு ஒரு திருமண மண்டபத்தில் திருமணம் நடந்தது. தாய் தகப்பன் வந்து தூப்புக்காரியை வந்து கூப்பிடறாங்க. தூப்புகாரி நாளைக்கு என்னோட பையன் திருமணம் நீதான் இலை எடுக்கனும் என கூப்பிடுறாங்க. அவளும் சரினு கனகா அவளுடைய தோழி

ரோகிணியை கூட்டிக்கிட்டு அங்க போறா போய் முதல்ல மண்டபத்தை கூட்டிச் சுத்தம் பண்றாங்க. அது அவளுக்கு ரொம்ப களைப்பா இருக்கு அதனால பந்தி நடக்கக்கூடிய இடத பார்த்தா உடனே ரோகினி எனக்கு கண்ணைக் கட்டிக்கிட்டு வருது கூட்டம் இல்லாம இருக்கு அதுல நாம கொஞ்சம் சாப்பிடலாம் அப்புறமா வேலையைப் பார்ப்போம் அப்படின்னு சாப்பிட உட்கார்ந்தாங்க. இதனை மனவேட அப்பா பார்த்துட்டாரு உடனே வந்து பயங்கரமாத் திட்டுகிறார். தூப்புக்காரியா இருக்கிற நீ முன்கூட்டியே வந்து உட்கார்ந்து சாப்பட்டா வேற யாராவது வந்து உட்கார்ந்து சாப்பிடுவாங்களா உனக்கு அறிவு இல்லையா அப்படின்னு சொல்லி முதல்ல எந்திரி அப்படின்னு சொல்லிட்டு சாப்பிட்ட இலையில் இருந்து எழுந்திரிக்கச் சொல்லிவிட்டுப் போறாரு. இதை தேயிலை கொடுக்க வந்த பூவரசி பார்த்துதாள் இந்த நிலையில் அம்மாவைப் பார்க்கும் போது அவளுக்கு அழுகை அழுகையா வருது அப்ப அவள் மனசுக்குள்ள காதலனாய் வச்சிருக்கிற மனோவும் நிக்கறதைப் பார்த்து அவ ரொம்ப வருத்தப்படுகிறா. அப்பதான் அவ நினைக்கிறா இந்த மாதிரியான உயர்ந்த அந்தஸ்தில் இருக்கக்கூடிய ஒருத்தரை விரும்புவது தப்பு அப்படின்னு சொல்லிட்டு அவன் மனசுக்கு அவளே கடிவாளம் போடுகிறாள்.

இந்த சூழ்நிலையிலும் பூவரசி அம்மாவுக்கு ரொம்ப உடம்பு முடியாத நிலை ஆகிறது. ஸ்கேன் எடுக்க வேண்டிய சூழல் அந்த மருத்துவமனையில் மனேவின் போன் நம்பர் அவசர உதவிக்கு எழுதி வச்சிருக்காங்க. அதை பார்த்து பூவரசி மனோவுக்கு போன் பண்ணி காரை எடுத்துக்கிட்டு வா அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்க்கணும் அப்படின்னு கூப்பிடுகிறா. அங்க என்ன சூழ்நிலை அப்படின்னா மனோ ஓட அண்ணனுக்கு திருமணம் முடித்த இடத்தில் நல்ல பெண் இருப்பதாகவும் அதன் மனோவிற்கு திருமணம் செய்து வைக்க அனுமதி கேட்டு மனோ கிட்ட பேசிட்டு இருக்காங்க. அதற்கு மறுப்புச் சொல்ல முடியாதவனாக மனோவும் நின்னுகிட்டு இருந்த சூழ்நிலையில்தான் பூவரசியேட போன் வருது முதல்முதலா பூவரசி தன்னிடம் பேசி உதவி கேட்பதால் மறுக்க முடியாமல் தன் பெற்றோரிடம் மனோ டாக்டர் அவசரமாக கூப்பிடுகிறார் என கூறி பொய் கூறிவிட்டு பூவரசி அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்க்க உதவி செய்கிறான். சரி நீ அம்மாவை பார்த்துக்கோ அப்படின்னு சொல்லிட்டு அதிகமாக பேசாம மனோ கிளம்புறேன். அந்த சமயத்துல பூவரசி அம்மாவிடம் அவசரமாக வந்ததால் நாளை மாற்று உடுப்பு எடுக்காமல் வந்துட்டேன் நான் போயி மாற்று உறுப்பு எடுத்துகிட்டு வரேன் சொல்லி கிளம்புறாள். மாடியில் இறங்கும் பொழுது மனோ எதிர்ப்பட்டு வருகிறான் அவன் கேட்கிறான் எங்க கிளம்பிட்ட அப்படின்னு அதற்கு பூவரசி மாற்று உடுப்பு எடுக்க வீட்டுக்கு போறேன் அப்படின்னு சொல்றா உடனே மனோ நான் போயி உன்னை வீட்டுல விட்டுறேன் சொல்லி கார்ல கூட்டிட்டு போறான் அங்கு இருக்கக்கூடிய அந்த இரவு சூழல் தனிமையான சூழல் காதல் இருவர் உள்ளத்திலும் தேங்கியிருந்த சூழல் அவர்கள் இருவரையும் இணைத்தது மனசு விட்டு பேசுறாங்க மனசு மனதோடு ஒன்றி அவர்கள் உடலால் ஒன்றக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. மாரி ஜன்னல் வழியா இவர்கள் இரண்டு பேரும் இணைந்து இருப்பதை பார்த்து விடுகிறான். ஆடை இல்லாமல் பூவரசி அவனோடு இணைந்து இருப்பதைக் கண்டு மனம் நொந்து விடுகிறான் (Malarvathi. 2012).

இந்நிலையில் மனோவின் வீட்டில் நிலைமை மாறுகிறது. திருமணத்திற்கு வற்புறுத்துகிறார்கள்இருவரும் திருமணம் செய்து கொள்ள முடியாத ஒரு சூழல் இங்கு பூவரசி தன் தாயாரின் உடல்நிலை மிகவும் மோசமாக இருப்பதால் அவளால் பழைய போல் வேலை செய்ய முடியவில்லை அவளுடைய வேலை எல்லாத்தையும் பூவரசிதான் செய்ய வேண்டும். அப்படி செய்ய முடியாது என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால் கடன் அதிகமாக இருக்கிறது கடனை அடைக்காமல் நாம் இங்கிருந்து வெளியேற முடியாது என்று தாய் போகிறாள். தன் தாய் செய்த அனைத்து வேளைகளை இவை ஏற்றுக்கொண்டு செய்ய தொடங்குகிறாள். இதை மனோ பார்க்க நேரிடுகிறது. மனதிற்குள்ளே அருவருப்பும் கொள்கிறான். பல நேரங்களில் பூவரசியை பார்த்தும் பார்க்காதது போல் சென்று விடுகிறாள் அவள் மேல் இருந்த காதல் அறவே குறைந்து விடுகிறது அவளோடு பேசுவதையும் பார்ப்பதையும் தவிர்க்கவே எண்ணுகிறான்.

பல நேரங்களில் பூவரசி தன் வேலையை எண்ணி மனம் நொந்து போக வந்து போகும்போதெல்லாம் மாரி நீ ஏன் இவ்வளவு கேவலமான தொழில் அசிங்கமான தொழில் செய்கிறோம் என்று நினைக்கிறாய் நீ இந்த உலகத்தை சுத்தம் செய்யும் புனிதமான வேலையை செய்வதாக எண்ணிக் கொள் அப்போது உனக்கு வருத்தம் தோன்றாது என்று ஆறுதல் கூறுகிறான்

அதையே அவ்வப்போது நினைத்துக் கொள்கிறாள். இவ்வாறு சில நாட்கள் கழிந்த போது மனோ ஒருமுறை மருத்துவமனை கழிப்பறைக்கு செல்கிறான் அவனின் பாசத்தை உணர்ந்த பூவரசி அவனைப் பின்தொடர்ந்து கழிப்பறை என்று கூட பார்க்காமல் உள்ளே சென்று அவளை பின்பக்கமாக கட்டித கட்டித் தழுவுகிறாள் அழுகிறாள் உடனே அதிர்ச்சி வயப்பட்ட மனோ அவள் கையை இழுத்து பிடித்து விளக்கி விட்டு அவளை பின்நோக்கி தள்ளிவிட்டு எதுவும் பேசாமல் அவ்விடத்தை விட்டு சென்றுச் விடுகிறான். இதைக்கண்ட பூவரசி மனோ மனோ என கத்திக்கொண்டே அழுகிறாள் ஆனால் மனோ எதையும் கண்டுகொள்ளாமல் சென்றுவிடுகிறாள். இந்நிகழ்வில் ஜன்னல் வழியாக கனகம் பார்த்துவிடுகிறார் அவளுக்கு அதிர்ச்சி. மாரிக்கு உன்னை திருமணம் செய்து வைக்கலாம் என நினைத்து இருந்தேன் என்று எண்ணுகிறார். அதாவது கனகம் மாரி சொந்த வீட்டில் இருக்கிறான். வேற ஜாதியாக இருந்தாலும் நல்ல வசதியோடு இருப்பதால் தன் பிள்ளையை திருமணம் செய்து கொண்டால் பிறக்கும் பிள்ளையை நன்றாகப் படிக்க வைப்பார் என என்று எண்ணி தன் கருத்தை மாற்றி அமைத்திருக்கிறார் இந்நிகழ்வு பார்த்ததற்கு பின்பு அவள் மனம் உடைந்து விடுகிறாள். இன்னும் என்னவெல்லாம் நடக்குமோ அதை நாம் காண வேண்டாம் என எண்ணி அலமாரியில் வைத்திருக்கக்கூடிய மாத்திரைகளை எடுத்து விழுங்கி அவள் இறந்துவிடுகிறாள். கனகத்தின் கதை முடிந்துவிடுகிறது. இந்நிலையில் பூவரசி கர்ப்பமாக இருக்கிறாள் சொல்றாங்க அதுகேட்ட மாரிக்கு அதிர்ச்சி மனோ தானே நான்தான் அன்னைக்கே ஜன்னல் வழியே எல்லாத்தையும் பாத்துட்டு பாத்துட்டேன் சொல்றான் சத்தமில்லாமல் இந்த குழந்தையா அழித்துவிடலாம் அப்படின்னு சொல்றான். பூவரசி மறுக்கவே உனக்குச் சம்மதம்னா நான் உன்னைத் திருமணம் செய்து கொள்கிறேன். அப்படின்னு சொல்லி திருமணமும் செஞ்சுகிறான். மாரி செத்ததுக்கு அப்புறம் குழந்தை பிறக்கிறது. இதுவரையில் கதையை எடுத்துச் சொல்வது போலத்தான் கதை நகர்வது செல்கிறது. இதற்கப்புறம் வருவது மனோ ஒருமுறை சொந்த ஊருக்கு வர தூப்புக்காரி எங்க தேடும்கிறான். பக்கத்தில விசாரிக்கிறான் அடையாளம் காட்டுகிறார்கள் ஒரு குழந்தையோட விதவை இருக்கிறாள் பூவரசி. திருமணமாக மூணே மாசத்துல மாரி லாரி விபத்தில் இறந்து போனான் என அறிந்து அடக்கடவுளே அவ கடைசிவரை நிம்மதியான வாழ்க்கையை வாழவே இல்லையா அப்படின்னு நிகழ்கால நிகழ்வைப் பதிவு செய்திருப்பார். அதன் பின் தன் குழந்தையை தத்துக்கொடுக்கக் கூடிய சூழலில் பூவரசி தன் தாய் கனகா தன்னை நல்லா படிக்க வைக்கனும் உயர்ந்த நிலைக்கு கொண்டு போகணும்னு ஆசை பட்டாள் அதை நிறைவேற்ற முடியல. என்னோட தாயோட கனவை நான் நிறைவேற்றுவேன் அப்படின்னு சொல்லி தன்னுடைய குழந்தையை அள்ளி மார்போடு அணைத்துக் கொள்கிறாள். தத்துக்கொடுக்க மறுக்கிறாள். இவ்வாறு அந்த கதை நிறைவடைகிறது (Malarvathi. 2012).

இந்த கதை அம்சத்தை ஆழ்ந்து பார்த்தால் பின்தங்கிய சமுதாயத்தினரின் கடினமான வாழ்க்கை சூழல் சித்தரிக்கப்பட்டிருக்கும். அந்த தூப்புக்காரி செய்யக்கூடிய வேலைகளை இந்த நாவலில் மலர்வதி ஆழமாக சித்தரிக்கிறார். அவங்க அந்த மருத்துவமனையில் பிரசவம் ஆகக்கூடிய பெண்களுடைய அந்த தீட்டு துணிகளை துவைக்கும் பொழுது கொச்சை வாடை அடிப்பது அதை அவர்கள் சகித்துக் கொண்டு வேலை பார்ப்பதையும் கூறியிருப்பார். கழிப்பறையைக் கழுவும் பொழுது அவர்கள் ஏற்படக்கூடிய இன்னல்களை விவரித்திருப்பார். அந்த காலகட்டத்தில் கழிப்பறையைச் சரிவர பயன்படுத்த தெரியாத நிலையில் அந்த கழிவுகள் எவ்வாறு காய்ந்து போயிருக்கும் அதை எவ்வாறு ஊறவைத்து அதை தூர் வாரி வாரி கழுவுவார்கள் அதை கேவிக்கேவி எவ்வாறு ஊற்றுவார்கள் என்பதும் அவர் அந்த தீட்டு துணிகளை எவ்வாறு போட்டுவிட்டு செல்வார்கள் அதை எவ்வாறு இவர்கள் அகற்றுவார்கள் என்பதையும் பிரசவத்தின் போது ஏற்படக்கூடிய உதிரப்போக்குகளை அந்தத் துணிகளை எவ்வாறு சகித்துக்கொண்டு கழுவுவார்கள் என்பதைச் சித்தரித்திருப்பார். மேலும் ஒரு முறை மருத்துவமனையில் தங்கி உள்ள நோயாளிகளுக்கு உணவு வரிசையாக நின்று கொடுத்துக் கொண்டிருப்பார்கள். அப்பொழுது கனகாவிற்கு பசி எடுப்பதால் அவளும் வரிசையில் நின்று வாங்குவாள். அப்பொழுது உணவு பரிமாறுவார்கள் சாப்பாடு கிடையாது நோயாளிகளுக்கு மட்டும் தான் உனக்கு கொடுக்க முடியாது என விரட்டுவார்கள். அப்போது ஒரு முதியவர் தான் வாங்கிய சாதத்தை வைத்து ஒன்றும் செய்யப்போவதில்லை நீ சாப்பிடு என்று கொடுப்பார் அதை எடுத்துக் கொண்டு செல்லும் கனகா நடை தடுமாறியதால் கையில் வைத்திருந்த அந்த சோற்றையும் தடுமாறி கீழே போட்டு விடுவாள். காலமும் சதி செய்வதாக பதிவு செய்திருப்பார். மேலும் ஒருமுறை நிர்வாக கூட்டத்தின்போது அனைவருடைய

சம்பள உயர்வும் பேசப்படும் அப்போது கனகாவும் எங்களுக்கெல்லாம் சம்பள உயர்வு கிடையாதா என உரிமையை மிக நகைச் சுவையாக கேட்பதுபோல கேட்பாள். ஆனால் அந்த மருத்துவ அதிகாரி தூய்மையாளரான உனக்கெல்லாம் சம்பள உயர்வு நீ என்ன கலெக்டர் உத்தியோகம் பார்க்கிறாய் என்று ஏளனமாக செய்வதை அவர் சித்தரித்திருப்பார். இவ்வாறு மேலும் அவள் மனிதக்கழிவுகளை அள்ளிக்கொண்டு இடுப்பில் வைத்துக் கொண்டு செல்வதும் அவர் கூறிய கூறியிருப்பார். இந்த நாற்றத்தால் உணவு உண்ண பிடிக்காமல் எதையாவது தேயிலை சாப்பிட்டால் மன நிறைவு கிடைக்குமோ அதுதான் உணவே தவிர சத்தான உணவுகள் என்பதைப் பற்றி அவர்கள் எதிர்பார்ப்பது இல்லை என்பதையும் பதிவுசெய்கிறார். அவருடைய தோற்றப் பொலிவை ஒரு முறை சொல்லும் போது கவிதைகளில் மங்கைகளை உயர்வாக மார்பழகை, இடை, கால் ஆகியவற்றை வர்ணித்து இருப்பார்கள். ஆனால் நாவலில் உண்மையான நிறுத்தப்பட்டிருக்கும் அவள் ஒரு முறை சாப்பிட வந்து இருக்கும் பொழுது நாற்றம் எடுக்கும் சேலையை கழட்டி போட்டுவிட்டுப் பாவாடையை ஏற்றி கட்டி கொண்டு உட்கார்ந்து சாப்பிடுவாள். அந்த பாவடையும் வியர்வையில் ஒட்டி இருக்கும் அந்த உடம்பில் அந்த உடம்பில் சதை என்று சொல்வதற்கு ஒன்றும் இருக்காது மார்பும் ஒட்டி வரண்டு போய் மார்போடு மார்பாக இடுப்புவரை தொங்கிக்கொண்டிருக்கும் பாவாடையானது கிழுந்து பின் பக்க உறுப்புகளை காட்டிக்கொண்டிருந்தது. கழுத்தில் எந்த அணியும் இல்லை. கையும் காலும் சுருக்குபிடித்து வங்கு வங்காக இருந்தது. கால் விரல்கள் எல்லாம் வரண்டு போய் அழுக்கு ஏறி வளமை இல்லாமல் இருந்தது என்று அவர்களுடைய வறுமை மற்றும் தொழில் ரீதியான உடல் வனப்பை வளர்மதி ஆழமாக சித்தரித்திருப்பார். துப்புரவு தொழிலாளர்கள் எவ்வாறு தங்களை உற்சாகப் படுத்திக் கொள்கிறார்கள் என்பதை ஆசிரியர் ஓரிடத்தில் காண்பித்துள்ளார். மாரி தன்னுடைய தொழிலை நினைத்து அவ்வப்போது நொந்து கொள்கிறான் அப்போது அவனை அவன் மனத்திற்கு துப்புரவு சங்க தொழிலாளர் மாநாட்டுக்கு வரும் பிரசங்கிகள் சொன்னதை தன் மனதிற்கு சொல்லிக் கொள்கிறான். அதாவது விவேகானந்தர் ஒரு முறை துப்புரவு தொழிலாளர் எதிர் வருவதை கண்டு இருகைகளையும் கூப்பி வணங்கினான் நீங்கள்தான் இவ்வுலகத்தில் நடமாடும் தெய்வம் என்று கூறினாராம். பகத்சிங் தூக்கிலிடும் பொழுது கூட தன் இறுதி ஆசையாக நான் ஒருமுறை துப்புரவு செய்யும் தொழிலாளரின் கையில் உணவு வாங்கி அருந்த வேண்டும் என்று கூறினாராம். இதை மீண்டும் மீண்டும் தனக்குள்ளாகவே கூறி தன் மனத்தை தானே உற்சாகப்படுத்திக் கொண்டு அந்த பணியில் நேர்மையுடன் செயல்படுவதாக ஆசிரியர் பதிவு செய்கிறார் (Malarvathi. 2012).

மேலும் அவர்களின் மன நிலை என்ன பூவரசி சொல்வதாக ஆசிரியர் ஓட்டத்தில் அன்பிற்காக ஏங்கி ஆடையில்லாமல் இருந்தபோதுகூட மனநிறைவோடு இருந்ததாகவும் ஆனால் இன்று அன்பு இல்லாமல் மனோ தன்னை தள்ளிவிட்டு செல்லும் பொழுது தான் ஆடையில்லாமல் நிர்வாணமாக இருப்பதாகவும் கழுதை போல் இருப்பதாகவும் உணர்வதாக அழுகிறாள். இதுவே தாழ்த்தப்பட்ட மக்களின் மன நிலையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

## நுகர்வோர் தாக்கம்

இலக்கியம் காலம் இடம் எனும் தளங்களையும் வாசகர்களின் அறிதிறன்கள் ஏற்பு முறைகள் முதலியவற்றையும் எதிர்கொண்டு வாழ்கிற திறம் பெற்றது. குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட கலைஞனால் அது படைக்கப்படுவதேயெனினும் தனது எல்லையையும் அளவையையும் ஒற்றறைப் புள்ளியில் முடித்ததுக்கொள்ளாமல் புதிது புதிதாய் உயிர்க்கிற அற்புதப் பண்பினை அது பெற்றிருக்கிறது. இத்தகைய திறம் அதன் உள்ளார்ந்த பண்புகளிலும் சூழமைவுகளிலும் பொதிந்து கிடக்கிறது. பொதிந்து கிடப்பதைப் புரிந்துகொள்கிறபோதுதான் கலைப்பொருள் தொடர்ந்து நுகரப்படுகிறது வாழ்கிறது.

“இலக்கியம் மட்டுமல்லாமல் எந்த ஒரு பொருளும் சரியான நுகர்திறன் பெற்றிருந்தால் மட்டுமே இடையீடுகளைக் கடந்து வாழும் சரியான பயனை அளிக்கும்” (Natarajan, 2012) இதனடிப்படையிலேயே இந்நாவல் வாசகர்களின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது “துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை அவலத்தையும் அவாகளது தொழிலின் அவலத்தையும் நம் கண்முன்னே காட்சிப்படுத்துவதோடு நம்மையும் அந்த இடத்திற்கே அழைத்துச்செல்கிறார் (Malarvathi. 2012)

"இந்நாவல் சாதியக்கொடுமை, பெண்ணடிமை, ஆணாதிக்கம், அதிகாரம் படைத்தோரின் அனாகரிகமான வார்த்தைகள், சுத்தப்படுத்தி தூய்மையாக்கும் துப்பரவு தொழிலாளிகளை இச்சமூதாயம் பார்க்கம் அவலநிலையைச் சமூதாய அக்கரையோடு புதுமைப்பெண்ணாக வளர்மதி படைத்துள்ளார்.

## முடிவுரை

இவ்வாறாக தூப்புக்காரி நாவலில் துப்புரவு பணியாளர்களின் கடினமான வாழ்க்கை பின்புலத்தைப் பதிவு செய்துள்ளார். இன்றைய கொரான காலத்தில் துப்புரவு பணியாளர்களின் மகிமையை நாம் நேரடியாக கண்டோம். மருத்துவர்கள் நோயாளிகளை பரிசோதித்து மருந்து மாத்திரைகளை கொடுத்து விட்டுச் செல்வார்கள் ஆனால் இந்த துப்புரவு பணியாளர்கள் தான் தாய் தகப்பன் போல அந்த நோயாளிகளை பார்த்துக்கொண்டனர். அருகிலேயே இருந்து சேவை செய்தனர். ஒருசமயம் கோயம்புத்தூர் மருத்துவமனையில் மருத்துவர்கள் செவிலியர் மற்றும் துப்புரவு பணியாளர்களை நிற்கவைத்து அவர்கள் காலில் விழுந்து வணங்கியது நாம் செய்தியில் பார்த்தோம். இந்த நாவலைப் படித்து முடித்தபின்பு ஒவ்வொருவரும் துப்புரவு பணி செய்யும் மக்களை கடவுளாக நாம் பார்க்க வேண்டும். அவர்களின் பணியின் உன்னதத்தை அறிந்து தெருவில் நாம் குப்பையைப் போடுவதோ, கழிவுகளை விட்டுச் செல்வதோ அல்லது எச்சில் துப்புவதுக் கூட நிதானித்து தான் நாம் செயல்பட வேண்டும். அவர்கள் கழிவுகளை அகற்றி இந்த பூமியை புனிதமாக இறைவனால் படைக்கப்பட்ட உயர்ந்த ஜீவன்கள் என்பது நாம் மனதார ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும். நம் இளைய தலைமுறையிடம் நமது எதிர்பார்ப்பு இதுவே ஆகும். நாமும் இது போன்ற அலங்களை களைத்தெறிய மலர்வதியைப் போல பல படைப்புகளைச் சமுதாயத்தின் முன் கொண்டுசெல்ல முன்வர வேண்டும்.

## References

Malarvathi, (2012) Thooppukkaari, Mathi Veeliyedu, Chennai, India.

Natarajan, T.S., (2012) Thiranaivu kalai, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License